# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051875

1. District : Chennai PS: VKAC / HQ Year: 2020 FIR No.: 16 Date: 20.11.2020
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 & 12.
   (ii) Act சட்டம்: (Amendment) Act 2018. Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 16.11.2020 Date to : 19.11.2020
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : 12.00 hrs Time to : 12.20 hrs.
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 20.11.2020 Time : 08.00
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) 20.11.2020 Time : 08.30
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written.
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 10 km North.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : (b) Address : O/o Estate Officer, Tamilnadu Slum Clearance Board, Teynampet, Chennai.
   முறைக் காவல் எண் முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. M. Malar (b) ~~Father's~~/ Husband's Name : Tr. Mohan (Late).
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : (g) Address : Elaiyamman Koil St, Sompattu East, Killikodi (PO), Kavarapattai, Ponneri (Tk), Thiruvallur.
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. Tr. Gunasekaran, EO, Tamilnadu Slum Clearance Board, Teynampet, Chennai.
   2. Tr. Velayutham (Private Individual.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   - No delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR Contents attached in separate sheets.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed S. Christy Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 20/11/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 20.11.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. CHRISTY
Rank: நிலை Inspector of police, No. எண் VACC, SIC.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>சமர்பிக்கப்படுகிறது.</u>

**<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையக குற்ற எண்.16/2020 பிரிவு 7 & 12 ஊழல் தடுப்பு சட்டம் 2018 (திருத்தம்) வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12ன் தொடர்ச்சி பின்வருமாறு</u>**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்பு புலனாய்வு குழு, ஆய்வாளர் J.கிறிஸ்டி ஆகிய நான் இன்று 20.11.2020 காலை 08.00 மணியளிவில் பணியில் இருந்தபொழுது திருமதி. M.மலர், க/பெ.மோகன் (லேட்), எல்லயம்மன் கோவில் தெரு, சோம்பட்டு கிழக்கு, கிள்ளிகொடி. (P.O), கவரப்பேட்டை, பொன்னேரி (T.K), திருவள்ளூர் மாவட்டம். என்பவர் அலுவலகம் ஆஜராகி என்னிடம் எழுத்து பூர்வமான புகார் மனு ஒன்றை அளித்தார். அவர் அளித்த புகார் மனு பின்வருமாறு:- அனுப்புநர் M.மலர், க/பெ.மோகன் (லேட்) எல்லயம்மன் கோவில் தெரு, சோம்பட்டு கிழக்கு, கிள்ளிகொடி. (P.O), கவரப்பேட்டை, பொன்னேரி (T.K), திருவள்ளூர் மாவட்டம், பெறுநர் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை. அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் எனது தந்தையுடன் வசித்து வருகிறேன். கடந்த 1996-ம் ஆண்டு எனக்கும் சென்னை, நல்லாங்குப்பத்தை சேர்ந்த மோகன் என்பவருக்கும் திருமணம் நடந்தது. 1998-ம் வருடம் உடல்நிலை குறைவால் எனது கணவர் இறந்துவிட்டார். பிறகு 2 ஆண்டுகள் நான் என்னுடைய மாமியார் அமிர்தமுடன் சென்னை, நல்லாங்குப்பம், கதவு எண்.6/40, 58 வது தெரு, அசோக் நகரில் என்னுடைய கணவர் பெயருக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் வசித்து வந்தோம். பிறகு கிள்ளிகொடியிலுள்ள எனது அப்பா வீட்டிலும், சென்னையிலும் மாறி மாறி வசித்து வருகிறேன். நான் என்னுடைய பிழைப்பிற்காக கூலி வேலை செய்கிறேன். என்னுடைய கணவர் பெயருக்கு ஒதுக்கப்பட்ட மனைக்கான மாதாந்திர தவணை முடிந்து 2013-ம் ஆண்டு EO தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், தேனாம்பேட்டை, சென்னை அவர்களால் ஆணை வழங்கப்பட்டது. என்னுடைய கணவர் இறந்துவிட்டதால், நானும் என்னுடைய மாமியாரும் வாரிசு ஆகும். எனவே என்னுடைய பெயருக்கு கிரையப் பத்திரம் வழங்க EO அவர்களிடம் மனு கொடுத்தேன். அதன் அடிப்படையில் பிப்ரவரி 2020 இறுதியில் தற்போதைய EO நேரில் எனது வீட்டிற்க்கு வந்து ஆய்வு செய்துவிட்டு அவரை அலுவலகத்திற்கு நேரில் வந்து பார்கும்படி என்னிடம் கூறினார். நானும் பல முறை சென்று பார்த்தேன். மார்ச் மாதம் முதல் கொரோனா என்பதால் நான் அலுவலகம் செல்ல வில்லை. அதன் பிறகு கிரையப் பத்திரம் குறித்து 05.11.2020 அன்று நான் EO அவர்களை அவருடைய அலுவலகத்தில் சந்தித்து நான் நான்கு வருடமாக கிரையப் பத்திரம் கேட்டு அலுவலகத்திற்கு அலைவதாக கிரையப் பத்திரம் தந்து உதவி செய்யுமாறு மீண்டும் கேட்டேன். அதற்கு அவர்

நான் இந்த அலுவலகத்திற்கு வந்து ஒரு வருடம் தான் ஆகிறது என்றும், வெளியில் உள்ள கண்காணிப்பாளரை மற்றும் வேலாயுதத்தையும் காட்டி அவர்களை பார்த்துவிட்டு வேலாயுதம் கூறுவதைபோல் செய்யுமாறு EO கூறினார். நான் கண்காணிப்பாளரை சந்தித்தபோது எனக்கும் அதற்கும் சம்மந்தமில்லை EO கூறுவதைப்போல் வேலாயுதத்தை பாக்கும்படி கண்காணிப்பாளர் கூறினார். நான் வேலாயுதத்திடம் EO அவரை பார்க்க சொன்னபோது அவர் EO-விடம் பேசிவிட்டு கூறுவதாக சொன்னார். மேலும் நான் நான்கு வருடமாக அலுவலகத்திற்கு செல்லும்போது நான் வேலாயுதத்தை அவ்வலுவலகத்தில் பார்த்திருக்கிறேன். அவரிடம் EO பெயர் திரு.குணசேகரன் என்பதை கேட்டு தெரிந்து கொண்டேன். பிறகு 09.11.2020 தேதி வேலாயுதம் தொலைபேசியில் என்னை அழைத்து கிரையப் பத்திரம் வழங்க பணம் செலவாகும் என EO திரு.குணசேகரன் கூறியதாக என்னிடம் கூறினார். நான் எவ்வளவு செலவாகும் என்று கேட்டதற்கு EO விடம் பேசிவிட்டு சொல்வதாக கூறினார். பின்னர் 16.11.2020 தேதி வேலாயுதம் தொலைபேசியில் என்னிடம் EO திரு.குணசேகரன் கிரையப் பத்திரம் வழங்க பணம் ரூ.50,000/- கேட்டதாக கூறினார். அதற்கு நான் கூலிவேலை செய்வதால் என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று கூறினேன். அதற்கு வேலாயுதம் நான் மறுபடியும் EO-விடம் பேசி பார்க்கிறேன் என்று கூறி போனை வைத்துவிட்டார். திரும்ப நேற்று (19.11.2020) வேலாயுதம் எனக்கு போன் செய்து இறுதியாக EO கிரைய பத்திரம் வழங்க ரூ.20,000/- கேட்டதாகவும் அதை இன்று 20.11.2020 அவரிடம் கொடுக்குமாறு என்னிடம் கூறினார். மேலும் எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலத்தில் வந்து எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். மேலும் எனக்கு எழுத படிக்க தெரியாததால் என்னுடைய நண்பரிடம் சொல்லி இப்புகாரை எழுதினேன். அவர் அப்புகாரை படித்து காட்ட சரியாக இருந்தது. என்னிடம் லஞ்சம் கேட்ட திரு.குணசேகரன் மற்றும் வேலாயுதம் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு s/dxxxx M.மலர்.

Sir,

The above complaint was received on 20.11.2020 at 08.00hrs and after getting concurrence conducted discreet verification and upon permission, registered a case in V&AC, Hqtrs, Cr.No.16/AC/2020/HQ, u/s 7 & 12 of Prevention of Corruption ( Amendment) Act 2018 on 20.11.2020 at 08.30 hrs.

(J.Christy),
Inspector of Police, 20/11/2020
Special Investigation Cell,
Vigilance and Anti- Corruption,
Chennai-16.